செய்தி வெளியீடு எண்: 405 நாள் : 30.07.2013

<u>செய்தி வெளியீடு</u>

- ***<u>மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு காய்கறி கடைகள் மூலம் இதுவரை 755 டன் காய்கறிகள் ரூபாய் 2,00,82,494 கோடிக்கு விற்பனை</u>***
- ***<u>மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 1கிலோ அரிசி ரூபாய் 20 க்கு கூட்டுறவு அங்கடிகள் மூலம் இதுவரை 2525 டன் ரூபாய் 5,05,06,800 க்கு விற்பனை</u>***
- ***<u>தக்காளி (நவீன்) கிலோ ரூ. 30 லிருந்து ரூ. 25 ஆக குறைக்கப்படுகிறது.</u>***
- ***<u>நாட்டு தக்காளி கிலோ ரூ. 20 லிருந்து ரூ. 18 ஆக குறைக்கப்படுகிறது.</u>***

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் இன்று (30/7/2013) **மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு நிர்வாக நடைமுறைப் பயிற்சியைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், ''**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் நேர்மையான முறையில் ஜனநாயக முறைப்படி நடைபெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, தமிழக வரலாற்றில் முதன் முறையாக, கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையம் அமைத்து, **12** ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல், சிறப்பான முறையிலும், ஜனநாயக முறையிலும் நடைபெற்று வருகின்றது. இத்தேர்தலில் வெற்றி பெற்று இங்குப் பயிற்சிக்கு வந்திருக்கும் அனைத்து கூட்டுறவு அமைப்புகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக திருவள்ளூர் மாவட்டம், திரூர் என்ற கிராமத்தில் **1904** ஆம் ஆண்டு, விவசாயிகளுக்கு என்று முதல் கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டு, கடந்த **109** ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது.

இதேபோன்று நுகர்வோர்களின் நலன் கருதில் **1904**ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது **214** நியாயவிலைக் கடைகளுடன் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் ''எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என்ற குறிக்கோளுடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டை முன்னேற்றப்பாதையில் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற பல முன்னோடித் திட்டங்களை கூட்டுறவின் மூலம் உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்.

தற்போது, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **10,368** கூட்டுறவு சங்கங்கள் **1,70,68,812** உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் ஆண்டொன்றிற்கு **ரூ.1,20,889.90 கோடி** அளவிற்கு வணிக நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு சங்க நிர்வாகக் குழுக்களில் 30 சதவிகிதம் மகளிருக்கும், 18 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் வழிவகை செய்துள்ளார்கள்.

**தமிழ்நாட்டைப் போன்று, கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கு 18% ஒதுக்கீடும், மகளிருக்கு 30% ஒதுக்கீடும் வேறெந்த மாநிலத்திலும் ஏற்படுத்தித் தரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.**

- தமிழ்நாட்டில், மாவட்ட அளவில் **34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்** செயல்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலைகள் தரமான நுகர்பொருள்களை கொள்முதல் செய்து, நியாயமான விலையில் பொதுமக்களுக்கு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன.

- தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும்வகையில் பொதுவிநியோகத் திட்டம், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் அரிசி பெற தகுதிபெற்ற **1.85 குடும்ப அட்டைதாரர்களுக்கு 31,428 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விலையில்லா 20 கிலோ அரிசி** விநியோகம் செய்யப்பட்டு வருவதோடு, **சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின்** மூலம் குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் **பருப்பு வகைகள், புளி, சர்க்கரை, கோதுரை** போன்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 1கிலோ அரிசி ரூபாய் 20 க்கு கூட்டுறவு அங்கடிகள் மூலம் இதுவரை 2525 டன் ரூபாய் 5,05,06,800 க்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு காய்கறி கடைகள் மூலம் இதுவரை 755 டன் காய்கறிகள் ரூபாய் 2,00,82,494 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- இன்று முதல் தக்காளி (நவீன்) கிலோ ரூ. 30 லிருந்து ரூ. 25 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- இன்று முதல் நாட்டு தக்காளி கிலோ ரூ. 20 லிருந்து ரூ. 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- மேற்கு வங்காள அரிசி விற்பனை 31.03. 2013 வரை 329 டன் அளவிற்கு ரூ 82.33 லட்சம் அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- மலைவாழ் மக்களின் நலன் கருதி, அவர்கள் உற்பத்தி செய்யும் **தேன், சாமை, வரகு மற்றும் புளி** போன்ற பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், பெரும்பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, பொதுவான வணிக முத்திரையோடு உறையிலிட்டு, விற்பனை செய்யும் திட்டத்தினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.
- மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் கூட்டுறவு மருந்தகங்கள் தொடங்கப்பட்டு, தற்போது தமிழகத்தில் மொத்தம் **110** கூட்டுறவு மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் அனைத்து வகையான மருந்துகளுக்கும் அதன் உயர்ந்த பட்ச சில்லறை விலையில் 12 சதவிகிதம் முதல் 17 சதவிகிதம் வரை நுகர்வோருக்கு தள்ளுபடி விலையில் வழங்குகின்றன.
- அத்தியாவசியப் பொருள்களின் வரத்துக்குறைவாக உள்ள காலம் மற்றும் உற்பத்தி அபரிமிதமாக உள்ள காலங்களில் நுகர்வோர் மற்றும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க, ரூ.50 கோடியாக இருந்த **விலைக் கட்டுப்பாட்டு நிதியை ரூ.100 கோடியாக** அதிகரித்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு.எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திருமதி. வ.கலை அரசி, இ.ஆ.ப., திருமதி கா. பிரமிளா, திரு.இராம ஜெயம்பாண்டியன், இணைப்பதிவாளர் டாக்டர் நா.வில்வசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காந்தி கிராமப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் டாக்டர் சி. பிச்சை, கூடுதல் பதிவாளர் (ஓய்வு) திரு.அ.ஜின்னா, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை துணை ஆணையாளர் திரு.எஸ்.விஜயன், கூடுதல் பதிவாளர் (ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம்) திருமதி கா.பிரமிளா, இணைப்பதிவாளர் (ஓய்வு) திரு.கே.ஜி.சந்திரசேகரன், கூட்டுறவு தணிக்கைத் துறை இணை இயக்குநர் திரு.எஸ்.செல்வின் ஜோசப், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை தரக்கட்டுப்பாட்டு அலுவலர் திரு. டி. ரகுநாதன், தொழில் வணிகத்துறை இயக்குநர் திரு.பரமேஸ்வரன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஏ.காத்திகேசன் ஆகியோர் தலைவர்களுக்கு பயிற்சியை வழங்கினார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9